## மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2017

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதி செயல் திறன் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 66 ஆம் இலக்க மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் விவரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று , நிதி செயல் திறன் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரம் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். ஆகையால், இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றிய கருத்துக்கள்

----------------------------------------------------

### 2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்

--------------------------------------------

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முழு உரிமையுடனான துணை கம்பனிகளான நெசனல் வெல்த் கோப்பரேசன் மற்றும் நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுக்கு தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்படவில்லை.மேலும், ஐம்பது சதவீத பங்கு உரிமை கொண்ட தேசிய லொத்தர் சபையின் நிதிக்கூற்றுக்களுடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைப்பதன் மூலம், குழு கணக்குகள் தயாரிக்காமை பற்றி நிதிக்கூற்றுக்களில் எந்த வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அறிக்கையிடலிற்கான கருத்தமைவு கட்டமைப்பின் பந்தி 4.56 இன் படி , நிறுவனம் வரலாற்று செலவினையோ அல்லது வேறு எந்த செலவையோ அடிப்படையாக கொண்டு அதன் நிதி கூற்றுகளை தயாரிக்க வேண்டும் மற்றும் அந்த குறிப்பிட்ட அடிப்படையை நிதி கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நிதி கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படை வெளிப்படுத்தபடவில்லை.

(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 7

------------------------------------------------------------------------

i. நியமத்தின் பந்தி 8 இன் படி , சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதி வகைப்படுத்தப்படுவதுடன் நிதி நிலைமைக் கூற்று அல்லது கணக்குகளுக்கான குறிப்புகளில் காட்டப்பட வேண்டிய போதிலும்,நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் அதன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ii. நியமத்தின் பந்தி 31 மற்றும் 33 இன் படி, நிதி இடர் முகாமைத்துவம் தொடர்பாக வெளிப்படுத்தபட வேண்டிய போதிலும், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் அதன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1

------------------------------------------------------

i. பந்தி 10 ( இ ) இன் படி , நம்பிக்கைப் நிதியத்தால் நிதிக் கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்பிக்கப்படவில்லை.

ii. நியமத்தின் பந்தி 60 இன் படி , நிதியத்தின் நிதி சொத்துக்களான ரூபா 9,861,439,390 பெறுமதியான தொகை, நடைமுறையல்லா சொத்துக்கள் மற்றும் நடைமுறை சொத்துக்கள் என தனியாக அடையாளப்படுத்தப்படவில்லை.

iii. நியமத்தின் பந்தி 99 இன் படி , வருமானம் மற்றும் செலவு கணக்குகள் , நிறுவனத்தின் தன்மை மற்றும் செயற்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலான வகைப்படுத்தலை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

நியமத்தின் பந்தி 15 இன் படி , சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படுவதற்கான தகுதி அதன் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்ற போதிலும் , இது புத்தகப் பெறுமதியில் கணக்கில் கொண்டு வரப்பட்டது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

நியமத்தின் பந்தி 30 (ஒ) இன் படி , வட்டியானது பயனுள்ள வட்டி வீதத்தில் கணிப்பிட வேண்டிய போதிலும், இது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் அட்டுறு அடிப்படையில் கணிபபிடப்பட்டது.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24

நியமத்தின் பந்தி 25 மற்றும் 26 இன் படி , தொடர்புபட்ட கட்சியின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தபட வேண்டும் என்றாலும், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் அதன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

நியமத்தின் பந்தி 45 இன் படி , நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியால் முகாமைத்துவம் செய்யப்படும் முதலீட்டு போர்ட்போலியோ தொடர்பாக அந்த கம்பனியால் அளிக்கப்பட்ட கணக்குகளின் படி, வரவு மீதிகளான ரூபா 3,525,437,950 பெறுதியான திறைசேரி முறிகள், ரூபா 738,287,267 பெறுதியான மீள் விற்பனைகள், ரூபா 1,128,829,462 பெறுதியான நிலையான வைப்புகள், ,ரூபா 1,111,305,960 பெறுமதியான தொகுதிக்கடன்,ரூபா 221,626,055 பெறுதியான சொத்து மீட்கும் நம்பிக்கை சான்றிதழ்கள்,ரூபா 621,358,828 பெறுதியான வணிக பத்திரங்கள்,ரூபா 999,230,273 மற்றும் ரூபா 253,937 பெறுமதியான திறைசேரி முறிகள் மற்றும் உண்டியலின் நடைமுறை கணக்கு மீதிகள் மற்றும் ,ரூபா 1,251,037 பெறுதியான மீள் கொள்வனவின் செலவு மீதி ஆகியன நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை கூற்றில் வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.மேலும் இந்த முதலீட்டை மீட்பதற்கான அடிப்படையை நிதி கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40

நியமத்தின் பந்தி 5 இன் படி, நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான 2005 ஆம் ஆண்டில் ரூபா 12,460,179 ஆக கணக்கில் காட்டப்பட்ட மாலபேயில் அமைந்துள்ள 25 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் வாடகை அடிப்படையில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (எஸ்எல்ஐஐரி) கொடுக்கப்பட்ட நிறுவனமானது தனிப்பட்ட சொத்தாக கணக்குகளில் காட்டப்படவில்லை. இதே போல இந்த சொத்துக்கள் நிதி கூற்றுகளில் நடைமுறை பெறுமதியில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பாண்டில் நிலையான வைப்பின் வட்டி வருமானம் ரூபா 6,186,038 ஆக இருந்த போதிலும், நிதி செயல் திறன் கூற்றில் பதியப்பட்ட முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய வருமானம் ரூபா 17,324,428 ஆன தொகையானது பெற்ற மொத்த வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் மதிப்பாண்டு காலத்தில் வட்டி வருமானம் ரூபா 11,138,390 ஆல் மிகையாக காட்டப்பட்டது.

(ஆ) அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் படி, மதிப்பாண்டில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாப பங்காக நம்பிக்கை நிதியத்திற்கு பெற வேண்டிய ரூபா 166,815,345 தொகையான வருமானம் கணக்கிடப்படவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கட்டிட பணிக்காக பாடசாலை அபிவிருத்தி நிதியில் இருந்து செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூபா 3,832,874 ஆனது 2013 ஆம் ஆண்டில் இருந்து இதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்படுகிறது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சம்ர்ப்பிக்கப்பட்ட நிதிகூற்றுக்களின் படி , 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 227,539,892 பற்றாக்குறையாக காணப்படுவதுடன் அதற்கு முன்னைய ஆண்டில் ரூபா 240,528,891 ஆன மிகையை காட்டுகின்றது.இதன் விளைவாக மதிப்பாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 468,068,783 ஆன வீழ்ச்சியை காட்டுகின்றது. மதிப்பாண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையில் இருந்து பெற வேண்டிய பங்கு இலாபம் பெறப்படாமையே இதற்கு பிரதான காரணமாக உள்ளது.

மதிப்பாண்டுடன் 5 முந்தைய ஆண்டுகளிற்கான நிதி விளைவுகளின் பகுப்பாய்வானது 2012 ஆம் ஆண்டில் இருந்து 2016 வரை தொடர்ச்சியான மிகையினையும் மற்றும் மதிப்பாணடில் வீழ்ச்சியையும் வெளிப்படுத்தப்படுகிறது.இருப்பினும், நடைமுறையல்லா சொத்திற்கான ஊதியம் மற்றும் தேய்வினை கருத்தில் கொள்ளும் போது, 2012 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு ரூபா 688,827,839 ஆனது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,086,213,752 வரை மேம்படுத்தப்பட்டது.மற்றும் அந்த திகதியிலிருந்து தொடர்ச்சியாக சரிவடைந்து மதிப்பாண்டிற்கான பங்களிப்பு ரூபா 164,859,366 ஆன எதிர்மறையான பெறுமதியை காட்டியது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 2014 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிறுவன திட்டத்தில் அடைய எதிர்பார்த்த இலக்குகள் நிதியியல் மற்றும் அளவிடக்கூடிய பெறுமதியில் காட்டப்படவில்லை..மற்றும் நிறுவன திட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படாத காரணத்தால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை.

#### 4.1.2 செயல்திறன் மற்றும் மீளாய்வு

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் மதிப்பாண்டு காலப்பகுதியில் பாடசாலைகள்,கல்வி நிறுவகங்கள்,அடித்தளங்கள் மற்றும் கல்வி நடவடிக்கையில் ஈடுபடும் வேறு நிறுவகங்களை நிர்மானித்தல் மற்றும் முகாமை செய்தல் போன்ற இலக்குகளை அடைவதற்கான கவனம் செலுத்தப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கை

நம்பிக்கை பொறுப்பு நிதியசட்டத்தின் பிரிவு 6.2 (அ),(இ)மற்றும் (ஈ) இன் பிரகாரம் ,நம்பிக்கை பொறுப்பு நிதியமானது அரசின் அனுமதியுடன் பணத்தை உருவாக்குவதற்காக லொத்தர்கள் நடத்துவதற்கு, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலகங்களில் இருந்து அல்லது மூலப்பொருளில் இருந்து கொடை ,பரிசு அல்லது நன்கொடை பெறுவதற்கு அதிகாரம் உள்ள போதிலும், அத்தகைய மூலங்களில் இருந்து நிதியை வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், மதிப்பாண்டில் ரூபா 308,807,761 தொகையானது திறை சேரி முறியில் மேற்கொண்ட முதலீட்டில் இருந்து பற்றப்பட்டது மற்றும் இது சம்பள கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்டது.

## 4.3 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழக அனுமதியினை பொறாத மாணவர்களுக்காக தகவல் தொழில்நுட்ப துறையில் உயர்கல்வி நுழைவாயிலை ஆரம்பிப்பதற்கான இலக்குடன் நம்பிக்கை நிதியத்தின் பங்களிபபில் இருந்து தகவல் தொழில்நுட்ப நிறுவனம் கட்டுவதற்கு 08 ஜுலை 1998 திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திர இல 98/995/11/052 ஊடாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி,உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளரால் 28 ஜனவரி 1999 இல் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில் இடைக்கால ஏற்பாடக வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) தகவல் தொழில்நுட்ப நிறுவனமாக ஸ்தாபிக்கப்படுகிறது மற்றும் இடைக்காலம் முடிவடைந்த பின்னர் மெறாட்டுவ பல்கலைக்கழகத்தின் கீழ் இந்த நிறுவனம் எடுத்துக்கொள்ளப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, ''இலங்கை'' இணை உள்ளடக்கி வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனமானது 1982 ம் ஆண்டு 17 ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது மற்றும் தேவையான நிதி வழங்குவதன் மூலம் வளப்பங்களிப்பு வழங்குவதற்கான பொறுப்பு மஹாபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கவனித்த விடயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்துடன் 19 மார்ச் 2003 இல் மேற்கொண்ட உடன்படிக்கைப்படி (எஸ்எல்ஐஐரி) பல்கலைகழகம் மஹாபொல நிதியத்துக்கு சொந்தமான மாலபேயில் உள்ள 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்பட்டு 8 வருடகாலத்துக்கு முகாமைத்துவத்திற்காக அந்த கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டது. 14 நவம்பர் 2005 இல் உடன்படிக்கை முடிவடையும் காலப்பகுதிக்கு முதல் நம்பிக்கை பொறுப்பு நிதியமானது மீண்டும் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் உடன்படிக்கையை ஏற்படுத்தியது. மற்றும் ஆரம்ப உடன்படிக்கையில் நீக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நிதியத்திற்கு பயனுள்ளதாக இருந்தது.

நீக்கப்பட்ட விதிமுறைகள்

(i) பிரிவு 4 (உ) - மஹாபொல பல்கலைக்கழகத்திற்குரிய எல்லா சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதாவது வர்த்தக நோக்கங்களிற்காகவோ பயன்படுத்த கூடாது. அது நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோளிற்கு அல்லது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (எஸ்எல்ஐஐரி) வேறுகிளைகளிற்கு பொருத்தப்படற்றது.

(ii) பிரிவு 4 (ஊ) - நம்பிக்கை நிதியத்தின் ஒப்புதலுடன் பல்கலைகழகத்தின் முன்னேற்றத்துக்காக செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளும் செய்யப்பட வேண்டும்.

(iii) பிரிவு 4 (எ) - கல்வி கற்கைகளை நடத்துவதில் இருந்து சம்பாதிக்கும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் நன்மைக்காக தேவையான செலவுகளை செலவழிப்பது என்பவை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) இன் பொறுப்பாகும்.

(iv) .பிரிவு 4 (ஜே)- நம்பிக்கை நிதியத்தால பல்கலைக்கழகத்தை அமைக்கும் நோக்கத்திற்காக தேசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து கணிசமான அளவு கடன் பெறப்பட்டதை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) தெரிந்திருக்க வேண்டும் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) இன் நிதிநிலைமை நிலையாக இருக்கும் பொழுது தவணைக்கட்டணம் செலுத்துவதற்கு முயற்சியளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(v) பிரிவு 4 (கே)- அறிமுகப்படுத்தும் புதிய கற்கை நெறிகளை மதிப்பிடு செய்வதற்கு மிகவும் திறமையான மற்றும் தகுதியான ஊழியர்களை கொண்ட திறமையான குழுவினை நியமிப்பதற்கு நம்பிக்கை பொறுப்பு குழுவிற்கு அதிகாரம் உண்டு மற்றும் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் கணக்குகளை பரீட்சிப்பதற்கு மற்றும் மதிப்பிடு செய்வதற்காக திறைமையான முகாமையாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை கொண்ட சுயாதீனமான குழுவினை நியமிக்கும் அதிகாரம் உண்டு.

(vi) பிரிவு4(ஐ)- நம்பிக்கை பொறுப்பு குழுவின் தீர்மானத்தின் படி, மாலபே பல்கலைக்கழகமானது மஹாபொல பல்கலைக்கழகம் என்ற பெயருடனும்,புதிய மண்டபம் லலித் அதுலத்முதலி மண்டபம் எனவும் பெயரிடப்பட வேண்டும். மற்றும் அந்த பெயர்பலகைகள் கட்டிடத்தில் தெளிவாக காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(vii) பிரிவு 4 (எம்) - காலம் முடிவடையும் போது அல்லது வேறு காரணத்தால் உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் நிதி அளிக்கப்பட்ட சொத்துக்கள் நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களாக காட்டப்படும்.

திருத்தப்பட்ட விதிமுறைகள்

------------------------------------------------

(viii) 2003 மார்ச் 19 திகதியிடப்பட்ட சட்ட உடன்படிக்கையின் பிரிவு 4 (ஐ) இன் படி, ஏற்றுக்கொள்ளப்பட்ட முகாமைத்துவக் கட்டணத்தை கழித்த பின் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளினுடாக உருவாக்கப்பட்ட மிகை வருமானமானமானது அடுத்த ஆண்டு ஜுன் 30 ம் திகதிக்கு முன்னர் நம்பிக்கை நிதியத்திற்க்கு செலவு வைக்கப்படும். மற்றும் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு குழுவின் உரிய அனுமதி இல்லாமல் பிறமுதலீடுகள் செய்யப்படமாட்டாது.இருப்பினும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (எஸ்எல்ஐஐரி) இயக்குனர்சபையால் பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகாக ஒரு ஒதுக்க கணக்கிணைப் பேணுவதற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு குழுவின் அனுமதி கோரப்பட்டது.மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கு சொந்தமான கட்டிடத்தை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (எஸ்எல்ஐஐரி) வாடகை அடிப்படையிலான புதிய உடன்படிக்கை ஊடாக வாடகைக்கு விடுவதற்கு பதிலாக இந்த ஒதுக்க கணக்கில் இருந்து அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.இரு பெறுமதிகளில் பிரிவு 5 (அ).(I) இன்படி ரூபா 8 மில்லியன் வருடாந்த வாடகை வருமானம்அல்லது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் வருடாந்த தேறிய லாபத்தில் 20 சதவீதத்தில் இருந்து கூடிய பெறுமதி செலுத்துவதற்கு ஒப்பு கொள்ளப்பட்டது.

(ix) நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையில் 19 மார்ச் 2003 ஆம் திகதியில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரிவு 4 (ஏ) இன் படி , பல்கலைக்கழகம் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கை பற்றி சிபாரிசு செய்யும் உரிமை நம்பிக்கை குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. மற்றும் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்தும் நடவடிக்கைகளும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் நடத்த வேண்டும். 14 நவம்பர் 2005 இல் நம்பிக்கை நிதியத்திற்கும் இலங்கை தகவல் தொழில்நுட்ப

நிறுவனத்திற்கும் (எஸ்எல்ஐஐரி) இடையில் இரண்டாவது உடன்படிக்கையின் பிரிவு 4 (உ) மற்றும் 4 (ஊ) இன் படி , இயக்குனர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானத்தின் படி பல்கலைக்கழக செயற்பாட்டு நடவக்கைகளிற்கு நடத்துவதற்கு ஒப்பு கொள்ளப்பட்டது.அதன் படி சுற்றறிக்கையை தயார் செய்தல், பரீட்சைகளை நடாத்துவதற்கு ஆயத்தம் செய்தல்,மாணவர்களை சேர்த்தல், கல்வி ஊழியர்களை சேவவையில் ஈடுபடுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை முகாமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கை செய்தல் ஆகியவற்றிற்கு இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனர் சபையின் கட்டளைப்படியும். மற்றும் முக்கிய கட்டுமானங்கள் மாத்திரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டது.

(ஆ) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) நிர்மானிக்கப்பட்ட குத்தகைக்கு விடபட்ட நிலம் தொடர்பாக பாக மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கும் வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனத்திற்கும் இடையில் 12 மே 2015 இல் இரண்டு உடன்படிக்கை ஏற்படுததப்பட்டது.மற்றும் மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தால் வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சார்பாக மேற்கொண்ட முதலீட்டுக்கு செலவுக்கு சமமான தொகை ரூபா 373,579,392 நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு திருப்பி செலுத்தப்பட்டது.மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப கம்பனி நிறுவப்பட்டது.
2003 மார்ச் 19 இல் ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப ஒப்பந்தம் மற்றும் 14 நொவெம்பர் 2005 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட நம்பிக்கை நிதியத்திற்கு சாதகமான நிபந்தனைகள் மேலுள்ள இரண்டு ஒப்பந்தந்தின் ஊடாக நீக்கப்பட்டது.மற்றும் பின்வரும் புதிய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டன.

i. நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் மேற்க்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பெறுமதி ரூபா 373,579,392, மஹாபொல என்ற பெயரில் வழங்கப்பட்ட புலமை பரிசிலை தொகை மற்றும் வேறு இடைநிலைச் செலவுகளை உள்ளடக்கி ரூபா 408,500,000 தொகையானது நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கொடுக்கப்பட வேண்டும். அதன் பின்பு மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் (எஸ்எல்ஐஐரி) இடையில் எதுவித நிதியியல் ஈடுபாடும் இல்லை. மஹாபொல நம்பிக்கை நிதியத்தில் இருந்து இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) ஒரு சுயாதீன நிறுவனமாக செயற்படும்.

ii. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) ஆனது இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் அல்லது சர்வதேச கணக்கீட்டு நியமத்துக்கு உட்படவில்லை.மற்றும் 2015/2016 ஆம் ஆண்டு முதல் மஹாபொல நிதியத்திற்கு கணக்குகளை தருவதற்கு அல்லது கணக்குகளை ஒருங்கிணைப்பதற்கான தேவையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

iii. 15 மே 2015 இல் இருந்து 14 மே 2075 வரையிலான 60 வருட காலத்திற்கு வருடாந்த குத்தகை வாடகை 5 வருடங்களிற்கு ஒருமுறை அதிகரிக்கப்படும் அடிப்படையில் மாலாபேயில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (எஸ்எல்ஐஐரி) குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இதன் படி 14 மே 2020 இல் முடிவடையும் 5 ஆண்டுகளிற்காக ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபா 20 மில்லியன் மற்றும் 15 மார்ச் 2070 இல் இருந்து 14 மார்ச் 2075 இன் 5 வருட காலத்திற்கு வருடாந்தம் ரூபா 40 மில்லியன் செலுத்துவதற்கும் இணங்கப்பட்டது.

iv. மாலபேயில் அமைந்துள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (எஸ்எல்ஐஐரி) குத்தகைக்கு விடப்பட்ட, மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு சொந்தமான நிலத்தை அல்லது அதன் பகுதியை துணைக்குத்தகைக்கு அல்லது அடமானம் வைப்பதற்கு மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு எழுத்துமூல அனுமதி தேவை இல்லை.

v. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) ஆனது அவர்களது செலவின் மூலம் பொருத்தமான நில வளாகத்தினுள் கட்டிடங்களை கட்டுவதற்கு, பொருத்தமான வளாகத்தினுள் இயந்திரம் மற்றும் உபகரணங்களை பொருத்துதற்கு அல்லது புணரமைப்பு செய்வதற்கு ,நிலத்தை முன்னேற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(இ) 14 நவம்பர் 2005 இல் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி, 12 மே 2015 இல் குத்தகை வாடகை ரூபா 98,642,356 நிலுவையிலிருந்த போதிலும், 12 மே 2015 இல் கம்பனியுடன் புதிய உடன்படிக்கையை கையெழுத்திட்டிருந்தது. மற்றும் 2015 இல் ஆரம்ப உடன்படிக்கையின் படி நம்பிக்கை நிதியத்தில் பெறவேண்டிய குத்தகை வாடகை ரூபா 45,358,379 ஆனது புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி ரூபா 20,000,000 வரை குறைக்கப்பட்டது.அமைச்சரவை முடிவினால் நிர்மானிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பாக நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு இத்தகைய பின்தங்கிய உடன்படிக்கை ஏற்படுத்தும் போது அமைச்சரவையின் அனுமதி மேற்கொள்ள வேண்டிய போதிலும்,அதன்படி செயற்படவில்லை.

(ஈ) 04 மே 2017 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மான இலக்கம் சிபி/17/0956/701/011 இன் படி,அரசுக்கு சொந்தமான சொத்தான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (எஸ்எல்ஐஐரி) ஆனது அரசுக்கு சொந்தமில்லாத ஒரு சுயாதீனமான நிறுவனம் என அங்கீகரிக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.இது எந்த அமைச்சின் கீழும் இல்லாமையால் அமைச்சர்களை கடமைக்கு நியமிப்பது தொடர்பாக வர்த்தமானி அறிவிப்புகளில் இருந்து அந்த நிறுவனத்தின் பெயர் நீக்கப்பட்டது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்

2003 ஜுன் 02 ம் திகதியிடப்பட்ட பொதுநிறுவனங்களின் சுற்றறிக்கையின் பீஈடி/12 ஆம் பிரிவின் 6.5.1 பிரிவின் படி, வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் நிதிஆண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 02 ஏப்ரல் 2018 இல் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 5.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு ஸ்தாபிக்கப்படவில்லை மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டத்தில் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை.மற்றும் அந்த அலகினால் கணக்காய்வு கூட மேற்கொள்ளப்படவில்லை.

.

## 5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய சட்டத்தின் பிரிவு 6 (2) (டி) இன் படி , நிதியத்தின் குறிக்கோளை அடைவதற்காக நிதியை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 2013 ஜுலை 11 ம் திகதியுடைய அமைச்சரவை பத்திர இலக்கம் 13/0773/540/008 இன் அனுமதியுடன் 2013 ஜுலை 30 இல் ‘‘மங்காத்தா லொத்தர்’’ மீள் அறிமுகம் செய்யப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு பாராளுமன்ற சட்டத்தின் இன் படி மங்காத்தா லொத்தரை நடைமுறைப்படுத்தப்படும் போது தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஊடாக இந்த லொத்தரை நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கான சாத்தியம் காணப்படவில்லை.

(ஆ) நிறுவகத்தால் லொத்தரை தனியார் நிறுவனத்தினூடாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மற்றும் இதன் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள மேற்கொள்ளப்பட்டன.

i. கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவின் படி முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் லொத்தரில் 6 பில்லியன் முதலீட்டினை அமுல்படுத்துவதற்கான முதலீட்டாளரை தெரிவு செய்ய 5 உறுப்பினர்களை கொண்ட ‘‘மஹாபொல லொத்தர் குழு’’ என்ற விசேட குழு 2012 யூலை 12 இல் நம்பிக்கை சபையால் நியமிக்கப்பட்ட போதிலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7.2 (ஆ) பிரிவின் பிரகாரம்,பெறுகைகள் மதிப்பீட்டு குழு நியமிக்கபடவில்லை.

ii. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.1 பந்தியின் படி கேள்வி கோருவதற்காக நிலையான கேள்வி கோரல் பதிவேட்டை பயன்படுத்தவில்லை. அத்துடன் பெறுகைகள் மதிப்பீட்டு குழு நியமிக்கபடாத காரணத்தால் பயன்படுத்தப்பட்ட கேள்வி கோரல் பதிவேடு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் பரிசோதிக்கப்பட்டு அனுமதி பெறப்படவில்லை.

iii. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பிரிவின் பிரகாரம், ஆகக்குறைந்தது 21 நாட்களை கொண்ட காலப்பகுதி கேள்வியை சமர்ப்பிப்பதற்கு வழங்க வேண்டிய போதிலும், 10 நாட்கள் மட்டும் வழங்கப்பட்டது. மற்றும் பெறப்பட்ட கேள்வயின் எண்ணிக்கை 3 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

iv. ஒரு கேள்வி மதிப்பிட்டு குழு நியமிக்கப்படாத காரணத்தினால், லொத்தர் குழுவால் விரிவான கேள்வி மதிப்பீடின்றி கேள்வியை ஓப்பீடு மட்டும் செய்யப்பட்டது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.2 பிரிவின் பிரகாரம், ‘‘நேரடி தகுதி’’ போன்ற தகுதிகள் கேள்வி அழைப்புக்கான தேவையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அது உள்ளடக்கப்படவில்லை,தெளிவான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று குறிப்பிடுவதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கேள்விகளில் ஒரு கேள்வி நிராகரிக்கப்பட்டது.

v. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12 ஆம் பிரிவின் படி, வினைத்திறனான போட்டியின்மை தெளிவுபடுத்தப்படும் போது பெறப்பட்ட அனைத்து கேள்விகளில் நிராகரிக்கப்பட்வையை நியாயப்படுத்த முடியும். இருப்பினும் அவ்வாறு இல்லாமல், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.10 ஆம் பந்திக்கு எதிராக,வேறு வளங்கள், நிதிநிலைமை மற்றும்

அனுபவங்கள் ஆகியவற்றை கவனத்தில் கொள்ளாது கம்பனியின் கேள்வியை மதிப்பிடுவதற்கு பதிலாக, கேள்வியை சமர்ப்பித்த வெளிநாட்டவர், கம்பனியின் முக்கிய முதலீட்டாளராக இருப்பது மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும், கம்பனியின் பதிவின் போது லொட்டரியை அமுல்படுத்துவது ஒரு இலக்காக குறிப்பிடப்படவில்லை.

vi. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் படி, ஒரு முறையான ஒப்பந்த உடன்படிக்கை பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரால் ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது. எனவே ‘‘மஹாபொல லொட்டரியை செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்கன வழிகாட்டுதல்’’ இன் 6,8,9,14,15,16,17 மற்றும் 20. குறிப்பிட்டுள்ள விடயங்கள் உடன்படிக்கையிலிருந்து நீக்கப்பட்ட காரணத்தால் லொட்டரி நடவடிக்கை மற்றும் செயல் திறன் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை.

vii. ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி 7.1 (பி) இன் படி, ஒப்பந்த கம்பனியால் காலாண்டில் ஆரம்பிக்கும் முதல் திகதியில் அல்லது அதற்கு முன்னர் தவணை கட்டணத்தை செலுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் ஒப்பந்தக்காரருக்கு 90 நாட்களுக்கு எழுத்துமுலம் அறிவிக்க வேண்டும் மற்றும் அந்த திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டும். எனினும், 05 மே 2015 இல் இருந்து கொடுப்பனவு தவற விடப்பட்டிருந்தாலும் கூட, நம்பிக்கை நிதியத்தால் எழுத்து முலம் அறிவிக்கப்படவில்லை. அதன்படி, 2015 ஓகஸ்ட் 17 இல் ரத்து செய்யப்பட வேண்டிய ஒப்பந்தம் ரத்து செய்யப்படாததால் 2016 செப்ரெம்பர் 15 இல் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.எனவே,ஒரு தனியார் கம்பனி ‘‘மஹாபொல’’ என்ற பெயரை பயன்படுத்துவதன் முலம் ஒரு வருடத்திற்கு மேலான காலப்பகுதியில் அதிக இலாபத்தை சம்பாதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.இதே போல அந்த திகதியில் நிலவையிலுள்ள தொகை ரூபா 673,913,043 ஆகும்.

(இ) நம்பிக்கை நிதியத்தின் அலுவலகத்தை நடத்துவதற்குரிய பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதற்காக தேவையான விபரங்களை அளிக்காமல், 2016 மே 14 இல் கேள்வி சமர்ப்பிப்பதற்குரிய இறுதி திகதி என குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரம் ரூபா 38,761 தொகையை செலவழித்து ஆங்கில மொழியில் பிரசுரம் செய்யப்பட்டது.எவ்வாறாயினும் 2016 மே 09 இல் நம்பிக்கை நிதியத்தால் மேற்கொண்ட எழுத்து மூல வேண்டுகோளின் படி , 2016 மே 18 ஆம் திகதி ஜே ஆர் ஜெயவர்த்தன சென்ரரால் சமர்ப்பிக்கப்பட்ட மாதவாடகை ரூபா 274,500 ற்கான கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி, பத்திரிகை விளம்பரத்தின் படி பெறப்பட்ட நிராகரிக்கப்பட்ட கேள்வி பெறுமதியை விட ரூபா 294,000 மிகை கொடுப்பனவு ஆண்டு தோறும் செலுத்தப்பட்டது. மேலும் ஒரு இயக்குனர் மற்றும் ஒரு நம்பிக்கையாளரால் மட்டும் தீர்மானம் எடுக்கப்பட்டது அவதானிக்கப்பட்டது மற்றும் நம்பிக்கை பொறுப்பு குழுவால் எடுக்கப்படும் தீர்மானம் மற்ற உறுப்பினரகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள | அவதானிப்புக்கள |
| --- | --- |
| (அ) உள்ளகக் கணக்காய்வு | கணக்காளர் பதவிக்கு ஓர் அதிகாரி நியமனம் செய்யப்படவில்லை. |
| (ஆ) நிதி முதலீடு | முதலீட்டிற்கான உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் முதலிட்டு நன்மையினை மதிப்பிடாமை. |
| (இ) பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டில் கோவை, பெறுகைகள் கையேடு மற்றும் பெறுகைகள் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படாமை. |